JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - PW- 1   Witness for Prosecution

CC No. 134/2024   Crime No.   Station

| | | | |
|---|---|---|---|
| Name | Pw-1- சிவக்குமார் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 06th day of October 2025 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம், கத்தேரி பிரிவு, சுபாஷ் நகரில் குடியிருந்து கொண்டு தனியார் பிரிண்டிங் மில்லில் வேலை செய்து வருகிறேன். கடந்த 15/09/2024 ஆம் தேதியன்று காலை சுமார் 04.30 மணிக்கு அம்மாபேட்டை வசந்தம் பேக்கரியில் வேலை செய்யும் கதிர்வேல் என்பவர் எனது அப்பாவின் செல்போன் நம்பரிலிருந்து போன் செய்து எனது அப்பா அம்மாபேட்டை to மேட்டூர் ரோட்டின் பிரிவு அருகில் அன்றைய தினம் அதிகாலை 04.00 மணியளவில் அடையாளம் தெரியாத வாகனம் மோதி விபத்து ஏற்பட்டு மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அ அழைத்துச் சென்று முதல் உதவி சிகிச்சை அளித்து, பின்னர் மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளதாக தகவல் சொன்னார். நான் உடனடியாக எனது குடும்பத்தாருடன் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அங்கு ICU பிரிவில் எனது அப்பா மயக்க நிலையில் இருந்தார். எனது அப்பா மயக்க நிலையில் இருந்ததால் அங்கு வந்து போலீசாரால் வாக்குமூலம் பதிவு செய்ய இயலவில்லை. பின்னர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் புகார் வாக்குமூலம் நான் அளித்தது தான் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக ஒன்றாக குறியீடு செய்யப்படுகிறது வழக்கு தொடர்பாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.10.06 07:04:17 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த விபத்து தொடர்பாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால். சரிதான்/ விபத்து சமயத்தின்போது எனது அப்பாவின் வயது 76 என்றால். சரிதான். சம்பவத்தின்போது எனது அப்பாவிற்கு மனநிலை பாதிக்கப்பட்டு இருந்தது என்றால், சரிதான். அவர் எங்கேயாவது சென்று வர வேண்டும் என்றால் யாருடைய துணை இல்லாமல் செல்ல இயலாது என்றால், சரிதான்.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.10.06 07:04:23 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - PW- 2 Witness for Prosecution

CC No. 134/2024 Crime No. Station

| | | |
|---|---|---|
| Name | Pw-2-கதிர்வேல் | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 06th day of October 2025 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் அம்மாபேட்டையில் குடியிருந்து கொண்டு, வசந்தன் பேக்கரியில் வேலை செய்து வருகிறேன். கடந்த 15/09 /2024-ம் தேதியன்று அதிகாலை சுமார் 04.30 மணியளவில் நான் ஊமாரெட்டியூர் பிரிவில் உள்ள வசந்தம் பேக்கரியின் முன்பு நின்று கொண்டிருந்தபோது ரோட்டின் ஓரமாக ஒருவர் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த லாரி நடந்து சென்று கொண்டிருந்தவரின் மீது மோதியது. மோதிவிட்டு லாரி நிற்க்காமல் சென்று விட்டது. மேற்படி விபத்தை நேரில் பார்த்த நான் அருகில் சென்று பார்த்தபோது அவருக்கு பலத்த அடிபட்டு இருந்தது. அவரது செல்போனை எடுத்து அதிலிருந்து அவரது மகனுக்கு போன் செய்து தகவல் தெரிவித்தேன். பின்னர் ஆம்புலன்சுக்கு போன் செய்து ஆம்புலன்ஸ் வந்தவுடன் அவரை மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். விபத்து ஏற்படுத்திய லாரியின் ஓட்டநர் லாரியை நிறுத்தாமல் சென்று விட்டதால் விபத்து ஏற்பட்டபோது என்னால் அவரை பார்க்க இயலவில்லை. விபத்து தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தின்போது நான் பேக்கரியின் உள்ளே டீ போட்டுக் கொண்டிருந்தேன் என்றால், சரிதான். நான் சம்பவத்தை சத்தம் கேட்டு தான் பார்த்தேன் என்றால், சரிதான்.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.10.06 07:04:31 +0530

மறு விசாரணை இல்லை.

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.10.06 07:04:38 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.